**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.460/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : ஆண்டாள் |
| Father's Name/ Husband's Name | : பழனி |
| Village & Taluk | : நடுப்பட்டு |
| Calling | : விவசாயம் |
| Age | : 65 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025**

**1ம் எதிரி ஆஜர் 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 பழனி த/பெ பச்சையப்பன் என்னுடைய கணவர் ஆவார். பட்டியல் சாட்சி–2 விஜயகுமார்எனது மகன் ஆவார். பட்டியல் சாட்சி–4 அமராவதி என் அம்மா ஆவார். ஆஜர் 1ம் எதிரி மற்றும் 2, 3 எதிரிகளை தெரியும. 2ம் எதிரி எனது பக்கத்து நிலத்துக்காரர். 1 மற்றும் 3 எதிரிகள் அவருடைய உறவினர் ஆவார்கள்.

2. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை 07.30 மணியளவில் நான், என் கணவர், என் மகன் மற்றும் என் அம்மா ஆகியோர்கள் என் வீட்டின் முன்னால் இருந்தபோது மூன்று எதிரிகளும் அங்கு வந்து எங்களை பார்த்து தேவையில்லாத வார்த்தைகளால் பேசி, கேஸ்ல ஜெயித்துவிட்டிர்களா என்று கேட்டார்கள். மேலும், 1ம் எதிரி என் கணவரை தடியால் தலையில் அடித்துவிட்டார். அதனை தடுக்க சென்ற என்னை 2ம் எதிரி தடியால் எனது கால் முட்டியில் அடித்துவிட்டார். தடுக்க வந்த எனது மகனை 1ம் எதிரியின் மகன் கையால் முதுகு மற்றும் முகம் ஆகிய இடங்களில் தாக்கிவிட்டார். அங்கு இருந்த எனது அம்மாவை 2ம் எதிரி பிடித்து கீழே தள்ளிவிட்டார். அதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டது. அங்கிருந்தவர்கள் எங்களை ஆட்டோ மூலமாக செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. 2ம் எதிரியின் தந்தை ரமணி என்பவருக்கும் எனது கணவருக்கும் என்ன உறவு முறை என்றால் அவர் எங்களது பக்கத்து நிலத்தை சேர்ந்தவர். 2ம்

எதிரியின் தந்தை தான் 1ம் எதிரியின் அண்ணன் என்றால் சரிதான். 2ம் எதிரிக்கும் எங்களுக்கும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றாலும், 1 மற்றும் 2 எதிரிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சனை இல்லை என்றாலும் சரிதான்.

3. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள உரிமையில் வழக்கு நாங்கள் தாக்கல் செய்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கு எங்கள் பக்கம் தீர்ப்பாகியுள்ளது. சொத்து சம்பந்தமாக எங்களுக்கும் 2ம் எதிரியின் தந்தைக்கும் இடையே சுமார் 20 வருடங்களாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். இந்த சொத்து சம்பந்தமான பிரச்சனை முடித்து சுமார் 10 வருடங்களுக்கு முன்பு எங்கள் மீதும், 2ம் எதிரியின் குடும்பத்தார் மீதும் குற்றவியல் வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவத்தை பொறுத்தும் 2ம் எதிரி என் மீதும், எங்கள் குடும்பத்தார் மீது புகார் கொடுக்கப்பட்டு வழக்கு தற்போது இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

4. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இரவு 7.30 மணி என்பது இருட்டான நேரம் என்றால் சரிதான். மருத்துவரிடம் என்னை 3 நபர்கள் தாக்கியதாக கூறினேன். 10 நபர்கள் என்னை தாக்கியதாக எனது விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் விவசாய வேலை செய்வேன் என்றாலும், அதன் விளைவாக எனக்கு உடல் வலி இருக்கும் என்றாலும் சரியல்ல. எதிரிகள் தாக்கியதால் தான் உடல் வலி ஏற்பட்டது.

5. நான் சொல்வது போல் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றாலும், 2ம் எதிரி எங்கள் மீது கொடுத்த புகாரில் இருந்து தப்பிக்க வேண்டி எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளோம் என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate, Gingee.

CC.No.460/2018

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 3 |
| Name (திரு/திருமதி) | : அமராவதி |
| Father's Name/ Husband's Name | : நாராயணசாமி |
| Village & Taluk | : நடுப்பட்டு |
| Calling | : – |
| Age | : 70 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025**

**1ம் எதிரி ஆஜர் 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

சாட்சிக்கு வயது முதிர்வு மற்றும் காது கேளாமை காரணமாக அவரால் மற்ற சாட்சிகள் போல சாட்சியம் அளிக்க இயலவில்லை. எனவே கேள்வி பதிலாக சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 பழனி த/பெ பச்சையப்பன் என் தம்பி ஆவார். அ.சா.2 ஆண்டாள் தம்பியின் மனைவி ஆவார். பட்டியல் சாட்சி–2 விஜயகுமார் எனது தம்பி மகன் ஆவார்.

கேள்வி– என்ன நடந்தது?

பதில் – என் தம்பியை அடித்தார்கள் அப்போது என்னை தள்ளிவிட்டார்கள்.

கேள்வி –உங்கள் தம்பியை யார் அடித்தது?

பதில் – ஆஜர் எதிரி தான் அடித்தார்

கேள்வி – எப்படி அடித்தார்கள்?

பதில் – தலையில் அடித்தார்

கேள்வி – 2ம் எதிரி பாரதி மற்றும் 3ம் எதிரி அருள் ஆகியோர்களை தெரியுமா?

பதில் – தெரியாது

கேள்வி – உங்களை யார் தள்ளிவிட்டது?

பதில் – 7.00 மணிக்கு தள்ளிவிட்டார்கள்

கேள்வி – வேறு யாருக்காவது அடிப்பட்டதா?

பதில் – சாட்சி எந்த பதிலும் அளிக்கவில்லை

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை எதிரிகள் தாக்கவில்லை என்றாலும், என் தம்பி பழனி எதிரிகளை பழிவாங்க வேண்டி கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.